## வகுப்பு - 8 - வரலாறு, 4. மக்களின் புரட்சி

36. வேலூர் கலகம் நடைபெற்ற நாள் ______.

(1) ஜூன் 10, 1806 (2) ஜூலை 10, 1807 (3) 10.07.1806 (4) 11.07.1806

37. முதல் இந்தியச் சுதந்திரப் போர் நடைபெற்ற ஆண்டு ______.

(1) 1855 (2) 1854 (3) 1856 (4) 1857

38. இராணி லட்சுமிபாய் ______ என்பவருடன் இணைந்து ஆங்கிலேயர்களை எதிர்த்தார்.

(1) நானா சாகிப் (2) தாந்தியா தோபே (3) பகதூர்ஷா (4) கனவர் சிங்

39. பிரிட்டிஷ் அதிகாரம் மீண்டும் இந்தியாவில் நிறுவப்பட்ட ஆண்டு ______.

(1) 1857 (2) 1858 (3) 1859 (4) 1856

40. இரண்டாம் பகதூர்ஷா ______ -க்கு நாடு கடத்தப்பட்டார்.

(1) கல்கத்தா (2) லக்னோ (3) டெல்லி (4) ரங்கூன்

41. ______ போரில் இராணி லட்சுமிபாய் கொல்லப்பட்டார்.

(1) ஜான்சி (2) குவாலியர் (3) கான்பூர் (4) ரங்கூன்

42. இரண்டாம் பகதூர்ஷா இறந்த வருடம் ______.

(1) 1858 (2) 1860 (3) 1862 (4) 1864

43. வேலூர் கலகத்தின் விளைவாகப் பதவி நீக்கம் செய்யப்பட்டவர் ______.

(1) அக்னியூ (2) வில்லியம் காவெண்டிஷ் பெண்டிங்

(3) கில்லெஸ்பி (4) கர்னல் இன்ஸ்

44. கானிங் பிரபு புரட்சியை அடக்க ______ நாட்டில் இருந்து படைகளை வரவழைத்தார்.

(1) கனடா (2) கல்கத்தா (3) பர்மா (4) பீகார்

LIVEWORKSHEETS

45. பெரும் புரட்சிக்குப் பிறகு கவர்னர் ஜெனரல் எவ்வாறு அழைக்கப்பட்டார்?

(1) இந்திய விவகாரச் செயலர் (2) தலைமைப் படைத்தளபதி

(3) இந்தியாவின் அரசர் (4) வைசிராய்

46. பீகாரில் நடைபெற்ற கலகத்தை அடக்கிய ஆங்கிலேயே அதிகாரி ______.

(1) டைலர் (2) கேம்பெல் (3) லாரன்ஸ் (4) நிக்கல்சன்

47. பகதூர் கான் தலைமையில் ______ இடத்தில் போர் நடைப்பெற்றது.

(1) கான்பூர் (2) டெல்லி (3) பரெய்லி (4) குவாலியர்

48. ஜெனரல் ஹக்ரோஸ்க்கு எதிராக மிகவும் துணிச்சலுடன் போரிட்டவர் ______.

(1) பகதூர் கான் (2) கன்வர் சிங்

(3) நானா சாகிப் (4) தாந்தியா தோபே

49. கட்டபொம்மன் தூக்கிலிடப்பட்ட நாள் ______.

(1) அக்டோபர் 17 (2) அக்டோபர் 18 (3) நவம்பர் 17 (4) நவம்பர் 18

50. பாளையக்காரர்கள் மீது ஆங்கிலேயரின் அதிகாரத்தை உறுதி செய்த உடன்படிக்கை ______.

(1) மதராஸ் உடன்படிக்கை (2) கர்நாடக உடன்படிக்கை

(3) பாண்டிச்சேரி உடன்படிக்கை (4) மைசூர் உடன்படிக்கை

51. எப்படைப்பிரிவைச் சார்ந்த இந்தியச் சிப்பாய்கள் வேலூர் கலகத்தைத் தொடங்கினர்?

(1) 21வது (2) 22வது (3) 23வது (4) 24வது

52. பிரெஞ்சு ராணுவத்தின் நவீன போர்முறைப் பயிற்சி பெற்று இருந்த இந்திய மன்னன் ______.

(1) கட்டபொம்மன் (2) பெரிய மருது

(3) பூலித்தேவன் (4) தீரன் சின்னமலை

LIVEWORKSHEETS

53. மாபெரும் புரட்சி கீழ்க்கண்ட எந்த பகுதியில் பரவவில்லை.

(1) பைசாபாத் (2) ஆற்காடு (3) பரெய்லி (4) கான்பூர்

54. பொருந்தாத ஒன்றைத் தேர்ந்தெடுக்கவும்.

(1) பூலித்தேவன் (2) கட்டபொம்மன் (3) தீரன் சின்னமலை (4) வ.உ.சி

55. பொருந்தாத ஒன்றைத் தேர்ந்தெடுக்கவும்.

(1) வேலுநாச்சியார் (2) சின்ன மருது

(3) வெள்ளச்சி (4) முத்து வடுக நாதர்

56. பொருந்தாத ஒன்றைத் தேர்ந்தெடுக்கவும்.

(1) கட்டபொம்மன் (2) தீரன் சின்னமலை

(3) ஊமைத்துரை (4) செவத்தையா

57. தென்னிந்தியக் கிளர்ச்சியில் ஆங்கிலேயர்களுக்கு ஆதரவளித்த பகுதிகளில் பொருந்தாதது எது?.

(1) திண்டுக்கல் (2) தஞ்சாவூர்

(3) புதுக்கோட்டை (4) எட்டயபுரம்

58. பொருந்தாத ஒன்றைத் தேர்ந்தெடுக்கவும்.

(1) கரூர் (2) திண்டுக்கல் (3) சேலம் (4) திருச்சி

59. பொருந்தாத ஒன்றைத் தேர்ந்தெடுக்கவும்.

(1) அக்னியூ (2) இன்ஸ் (3) எட்வர்ட் கிளைவ் (4) கில்லெஸ்பி

60. பின்வருவனவற்றுள் தவறான கூற்றைத் தேர்ந்தெடுக்கவும்.

(1) ஆற்காட்டு நவாப் மற்றும் ஆங்கிலேயரின் கூட்டுப்படைகள் பூலித்தேவரால் திருநெல்வேலியில் தோற்கடிக்கப்பட்டன.

(2) இந்தியாவில் ஆங்கில ஆட்சியை எதிர்ப்பதில் தமிழ்நாட்டில் முன்னோடியாக இருந்தவர் பூலித்தேவர்.

LIVEWORKSHEETS

(3) யூசுப்கான் தலைமையிலான ஆற்காடு நவாபின் படைகள், பூலித்தேவரால் அந்தநல்லூரில் தோற்கடிக்கப்பட்டன.

(4) கேப்டன் கேம்பெல் என்பவரால் 1767 ஆம் ஆண்டு பூலித்தேவர் தோற்கடிக்கப்பட்டார்.

61. பின்வருவனவற்றுள் சரியான கூற்றைத் தேர்ந்தெடுக்கவும்.

(1) 1800 - இல் கட்டபொம்மன் தனது அமைச்சருடன் காலின் ஜாக்சனைச் சந்தித்தார்.

(2) கட்டபொம்மன் தனது அமைச்சருடன் தப்பிக்க உதவி செய்த மன்னன் பூலித்தேவன் ஆவார்.

(3) கட்டபொம்மன், சென்னைக் கவுன்சிலின் கவர்னர் இராபர்ட் கிளைவுக்கு கடிதம் எழுதினார்.

(4) கட்டபொம்மன் நாட்டில் நிலவும் பஞ்சத்தின் காரணமாக நிலுவைத் தொகையைச் செலுத்த முடியாது என்று ஜாக்சனிடம் கூறினார்.

62. பின்வருவனவற்றுள் தவறான கூற்றைத் தேர்ந்தெடுக்கவும்.

(1) சிவகங்கையின் இராணி வேலுநாச்சியார்.

(2) வேலுநாச்சியார் தனது 15ஆம் வயதில் திருமணம் செய்து கொண்டார்.

(3) தமிழர்களால் வேலுநாச்சியார் "வீரமங்கை" என அழைக்கப்பட்டார்.

(4) வேலுநாச்சியார் தனது மகள் வெள்ளச்சியுடன் கோபால நாயக்கர் பாதுகாப்பில் வாழ்ந்தார்.

63. பின்வருவனவற்றுள் தவறான கூற்றைத் தேர்ந்தெடுக்கவும்.

(1) இந்தியச் சிப்பாய்களுக்குக் கடுமையான கட்டுப்பாடுகள் மற்றும் புதிய சீருடைகள் வழங்கப்பட்டன.

(2) இந்தியச் சிப்பாய்கள் தாடி மற்றும் மீசையை மழித்து நேர்த்தியாக வைத்துக்கொள்ள அறிவுறுத்தப்பட்டனர்.

(3) இந்தியச் சிப்பாய்களின் சமய அடையாளமான நெற்றியில் அணிதல், காதுகளில் வளையம் அணிதல் ஆகியவற்றிற்கு அனுமதி வழங்கப்பட்டன.

LIVEWORKSHEETS

(4) இந்தியச் சிப்பாய்களை ஆங்கிலேயர்கள் தாழ்வாக நடத்தி, இன பாரபட்சம் காட்டினர்.

64. பின்வருவனவற்றுள் சரியான கூற்றைத் தேர்ந்தெடுக்கவும்.

(1) சரியான ஒருங்கிணைப்பு, ஒழுக்கம், கட்டுப்பாடு, ஆகியவை புரட்சியாளர்களிடம் இருந்தன.

(2) ஆங்கிலப் படைத்தளபதிகளுக்கு இணையானவர்களாகப் புரட்சியாளர்கள் இருந்தனர்.

(3) சீக்கியர், ஆப்கானியர்கள், கூர்க்கர் படைப்பிரிவினர்கள் புரட்சியாளர்களுக்கு உதவினர்.

(4) சிறந்த ஆயுதங்கள், சிறந்த தளபதிகள் புரட்சியாளர்களிடம் இல்லை.

65. பொருத்துக.

a) 1759 - i) பூலித்தேவர் மீண்டும் நெற்கட்டும் செவலைக் கைப்பற்றினார்.

b) 1761 - ii) கேம்பெல் என்பவர் பூலித்தேவரைத் தோற்கடித்தார்.

c) 1764 - iii) யூசுப்கான் நெற்கட்டும் செவலைத் தாக்கினார்.

d) 1767 - iv)ஆற்காடு நவாப்பின் படை நெற்கட்டும் செவலைக் கைப்பற்றியது.

| | a | b | c | d | | a | b | c | d |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| (1) | iii | ii | iv | i | (2) | ii | i | iii | iv |
| (3) | iii | iv | i | ii | (4) | iv | iii | i | ii |

66. பொருத்துக.

a) வேலுநாச்சியார் - i) மைசூர் புலி

b) தீரன் சின்னமலை - ii) சிவகங்கையின் சிங்கம்

c) சின்ன மருது - iii) கொரில்லா போர்

d) திப்பு சுல்தான் - iv) வீரமங்கை

| | a | b | c | d | | a | b | c | d |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| (1) | iv | iii | ii | I | (2) | iv | iii | i | ii |

LIVEWORKSHEETS

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| (3) | iv | i | iii | ii | (4) | i | ii | iii | iv |

67. பொருத்துக.

a) கட்டபொம்மன் - i) சங்ககிரி

b) மருது சகோதர்கள் - ii) கயத்தாறு

c) தீரன் சின்னமலை - iii) குவாலியர்

d) இலட்சுமிபாய் - iv) திருப்பத்தூர்

| | a | b | c | d | | a | b | c | d |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| (1) | ii | i | iii | iv | (2) | ii | iv | i | iii |
| (3) | ii | iii | iv | I | (4) | i | ii | iv | iii |

68. பொருத்துக.

a) பாளையக்காரர் முறை - i) 1801

b) சுதந்திர பிரகடனம் - ii) 1857

c) முதல் சுதந்திர போர் - iii) 1806

d) வேலூர் கலகம் - iv) 1529

| | a | b | c | d | | a | b | c | d |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| (1) | iii | ii | i | iv | (2) | ii | i | iv | iii |
| (3) | i | iv | iii | ii | (4) | iv | i | ii | iii |

69. பொருத்துக.

a) டெல்லி - i) தாந்தியா தோபே

b) கான்பூர் - ii) கன்வர் சிங்

c) குவாலியர் - iii) பகதூர்ஷா

d) பீகார் - iv) நானா சாகிப்

| | a | b | c | d | | a | b | c | d |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| (1) | iv | iii | ii | I | (2) | i | ii | iii | iv |

LIVEWORKSHEETS

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| (3) | iii | iv | i | ii | (4) | ii | i | iv | iii |

70. பொருத்துக.

a) லட்சுமிபாய் - i) நிக்கல்சன்

b) பகதூர் கான் - ii) லாரன்ஸ்

c) ஹஸ்ரத் மகால் - iii) கேம்பெல்

d) பகதூர்ஷா - iv) ஹக்ரோஸ்

| | a | b | c | d | | a | b | c | d |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| (1) | iv | iii | ii | I | (2) | i | ii | iii | iv |
| (3) | i | iv | iii | ii | (4) | iv | ii | i | ii |

LIVEWORKSHEETS